**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 16.06.2026</u>**

**OS.No.164/2023**

**வா.சா.2 திரு.சக்திவேல்**
**வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**
**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) தங்கமணி எனது நண்பரா என்றால் நண்பர் இல்லை, தெரிந்த நபர். தங்கமணி வீட்டிற்கு எதற்காக நான் சென்றேன் என்றால் கவியரசு, தங்கமணி கூப்பிட்டதால் நான் சென்றேன். கவியரசு எனக்கு எப்படி தெரியும் என்றால் தங்கமணியுடன் நான் கவியரசு வேலூர் பக்கத்தில் உள்ள மருத்துவமனைக்கு சென்றபோது பார்த்தேன். கவியரசுவை நான் பள்ளியில் வைத்து பார்த்தேனா என்றால் ஆமாம். கவியரசு என்ன வேலை பார்க்கிறார் என்றால் இன்ஜினியர் என்று சொன்னார்கள். கவியரசுவை நான் பள்ளியில் வைத்து பார்த்ததாக சொல்லுவது தவறு,அவர் நேஷனல் ஹைவேசில் சீப் என்ஜினியராக வேலை பார்த்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது, ஆனால் அவரை பள்ளியில் தான் பார்த்தேன். என்ன தேதியில் கடன் கேட்டார் என்று எனக்கு தெரியுமா என்றால் அது எனக்க தெரியாது. எதற்காக கடன் கேட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் குடும்ப செலவு என்று சொன்னார்கள்.

2) கடன் கொடுக்கும்போதே குடும்பசெலவுக்கு என்று சொல்லி கொடுத்தார்கள் என்றால் ஆமாம். எந்த தேதியில் பணம் வாங்கினார் என்றால் 23.03.2022ம் தேதி. புரோநோட்டில் யார் முதலில் கையெழுத்து போட்டது என்றால் கவியரசு முதலில் போட்டார், அடுத்து நான் போட்டேன். வேறு யார்

கையெழுத்து போட்டார் என்றால் பொன்னுவேல் என்பவர் கையெழுத்து போட்டார். அவர் தான் அந்த புரோநோட்டை எழுதியவர். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ளடக்கம் எழுதப்பட்ட இன்க்கும், கையெழுத்த இடப்பட்ட இன்க்கும் வேறு வேறு என்று சொன்னால் சரிதான். பலமுறை பணத்தை நேரில் கேட்டதாக சொல்லியுள்ளேன், நான் உடன் சென்றேனா என்றால் ஒருமுறை சென்றேன். எந்த தேதியில் அவ்வாறு சென்றேன் என்று சொல்ல முடியுமா என்றால் அது எனக்கு நினைவில்லை. தங்கமணி எந்த தேதியில் சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் தேதி எனக்கு தெரியவில்லை, ஆனால் சட்ட அறிவிப்பு அனுப்பியதாக சொன்னார். நானும், தங்கமணியும் பைனான்ஸ் நடத்துவதில் கூட்டாளிகள் என்றால் இல்லை, நான் விவசாயம் செய்து வருகிறேன். நானும், தங்கமணியும் பைனான்ஸ் பார்ட்னர் என்பதால் தங்கமணிக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை எனக்கு யார் என்றே தெரியாது என்று சொன்னால் சரியல்ல, தெரியும்.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.16 16:33:52 +0530